செ.வெ.எண்:31 நாள்: 19.06.2019

# பத்திரிக்கைச் செய்தி

தமிழக அரசின் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத்திட்டத்தின் கீழ், 2018-19 ஆம் ஆண்டிற்கு அரியலூர் மாவட்டத்திற்கு 1088 இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டு 08.01.2019 முதல் 18.01.2019 வரை விண்ணப்பம் பெறப்பட்டதில் 604 மட்டுமே பெறப்பட்டுள்ளது. இலக்கீட்டில் 21% ஆதிதிராவிடருக்கும் 1% பழங்குடியினருக்கும் 4% மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படவில்லை. எனவே இவ்வாண்டு இலக்கீடு எய்தும் பொருட்டு 20.06.2019 முதல் 04.07.2019 வரை மீண்டும் விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. மாற்றுத் திறனாளி அதிகபட்ச மான்யத் தொகையான ரூ.25,000/- ஒதுக்கீட்டில் கூடுதலாக 25% தொகை அதாவது அதிகபட்சமாக ரூ.31,250/- வரை மான்யம் பெற்றுக்கொள்ளலாம். எனவே அம்மா இருசக்கர வாகனத்திட்டத்தின் கீழ் மான்யம் பெறப்படுவதற்கான விண்ணப்பங்களை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் இலவசமாக பெற்று பூர்த்தி செய்து 04.07.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்கலாம்.

**இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :-** இருசக்கர வாகனத்திற்கான மானியம் பெறுவோர் சில ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகிறது. அதன்படி வயதிற்கான சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் (ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம் / பழகுநர் ஊரிமம் (LLR), வாக்காளர் அடையாள அட்டை இவைகளில் ஏதேனும் ஒன்று) ஓட்டுநர் உரிமம், வருமான சான்றிதழ் (வேலை அளிப்பவரிடமிருந்து பெற வேண்டும்). வேலையின் தன்மை குறித்த சான்றிதழ் ஆதார் அட்டை, கல்விக்கான சான்றிதழ் (8 ஆம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும்) கடவு சீட்டு அளவு புகைப்படம், ஜாதி சான்றிதழ் (தாழ்த்தப்பட்ட பழங்குடியின வகுப்பினராக இருந்தால்) ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**வயது வரம்பு :-** இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் மானியம் பெற 18 வயது முதல் 40 வயது வரையில் ஓட்டுநர் உரிமம் வைத்துள்ளவர்கள் விண்ணப்பிக்க வேண்டும். அவர்களது ஆண்டு வருமான அளவு ரூ.2,50,000/-ஐ தாண்டக்கூடாது. மிகவும் பின்தங்கிய பகுதிகள், மலை பகுதிகள், கணவனால் கைவிடப்பட்டோர், கணவனை இழந்தோர், மாற்றுத்திறனாளிகள், 35 வயதை தாண்டிய திருமணம் ஆகாத பெண்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**